ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி - 2

# தமிழவேள் மாணவர் இதழ்

இதழ் – 4 ஆசிரியர்: முனைவர்.சு.பானுமதி தமிழ்த்துறைத்தலைவர் முனைவர்.க..சுப்புலட்சுமி இணைப் பேராசிரியர் 2021-2022

தமிழ்த் துறை

## வ. உ. சியின் தமிழ்த் தொண்டு

### முன்னுரை:

“ஈன்று புறந்தருதல் எந்தலைக் கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே

வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே”

- புறநானூறு

என்ற “பொன்முடியாரின்” வாக்கிற்கிணங்க தனதுகடமைகளை நாட்டிற்காக சரியாக செய்து நமது நாட்டை மேம்படுத்த பாடுபட்டவர் வ.உ.சி. ஆவார். இவரைக் குறித்தும் இவரின் தமிழ்த் தொண்டிணைக் குறித்தும் விளக்கமாகவும் தெளிவாகவும் இக்கட்டுரையில் காண்போம்.

### வ.உ.சி ஒரு தமிழறிஞர் :

வ.உ.சிதம்பரனார் குறித்து நாம் அனைவரும் கேள்விப்பட்டது வ.உ.சி.ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார்என்பது அதுமட்டுமல்ல வ.உ.சி ஒரு சிறந்த தமிழறிஞரும் ஆவார்.

“விடுதலை போராட்ட வீரர் என்ற பொதுமுகத்தையும் தாண்டி தமிழறிஞர் என்னும் முகமும் வ.உ.சி.க்கு உண்டு!”

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் என்னும் இடத்தில் (05.09.1872)ஆம் ஆண்டு “உலகநாதன் பிள்ளை” என்ற வழக்கறிஞருக்கு மகனாக வ.உ.சி. பிறந்தார். வ.உ.சி. சுதந்திர போராட்ட வீரர் என்பது நமக்கு தெரியும். ஆனால் வ.உ.சி. ஒரு சிறந்த தமிழறிஞரும் ஆவார். தமிழ் மொழிக்காக சில நூல்களை சிறப்பாக பதிப்பித்தும், சில நூல்களுக்கு உரை எழுதுதல்

போன்ற தொண்டையும், சில ஆங்கில நூல்களை தமிழில் மொழி பெயர்த்தும் சிறந்த தமிழறிஞராய் விளங்குகிறார்.

**தமிழில் உரை எழுதுவதில் சிறந்தவர் வ. உ. சி.:**

“பயன்தூக்கார் செய்த உதவி
நயந்தூக்கின் நன்மை
கடலின் பெரிது”

என்ற வள்ளுவரின் குறளிர்கிணங்க எதிர்பார்ப்பு இல்லாமல் செய்த உதவி கடலிலும் பெரிது போல வ.உ. சிதம்பரனார் தமிழுக்கு செய்த உதவி மிகவும் பெரிது ஆகும். வ.உ.சி. ஒரு சிறந்த “இலக்கியவாதி” ஆவார். திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார். தொல்காப்பிய பொருளதிகாரத்திற்கு பேராசிரியர் “வையாபுரியுடன்” சேர்ந்து உரை எழுதியுள்ளார். அதுமட்டுமல்ல “நன்னிலை” என்ற நூலிற்க்கும் “சிவஞன போதம்” என்ற நூலிற்க்கும் உரை எழுதி தான் ஒரு இலக்கியவாதி என்பதை உணர்த்தியுள்ளார்.

**வ.உ.சி. யின் பதிப்புரை:**

“பாதங்கள் நடக்கத் தயாராய் இருந்தால் பாதைகள் மறுப்பு சொல்ல போவதில்லை” என்ற “மேத்தாவின்” கருத்துக்களுக்கு இணங்க வ.உ.சி 1910 ஆம் ஆண்டு தொல்காப்பியத்தை படிக்கிறார். தொல்காப்பியத்தின் சிறப்பை தான் அறிந்து கொண்டது மட்டுமல்லாமல் அனைவருக்கும் கூறுகிறார். ஆனால் தொல்காப்பியத்திற்கு உரை மிகவும் கடினமாக சான்றோர்கள் எழுதி உள்ளதை உணர்கிறார். அனைத்து பாமர மக்களுக்கும் புரியும் எளிய நடையில் எழுத முயற்சி செய்கிறார். எளிதாக்க “செல்வகேச முதலியாரிடம்” செல்லுகிறார். செல்வகேச முதலியார் “இளம்பூரணாரின்” எழுத்ததிகார நூல், சொல்லாதிகார ஏட்டு பிரதி மற்றும் பொருளதிகார ஏட்டு பிரதியை கொடுக்கிறார். இளம்பூரணாரின் உரையின் உயர்வு, எளிமை, சிறப்பு ஆகியவற்றை உணர்கிறார். பின்னர் பொருளதிகாரத்தை தொல்காப்பியத்தில் “இளம்பூரணர்” உரையை முதன் முதலாக சிறப்பித்துள்ளார்.

**வ.உ.சி யின் மொழிபெயர்ப்பு:**

வ.உ.சி. தமிழ்இலக்கியவாதி, தமிழ் உரை ஆசிரியர் என்ற பெயரையும் கடந்து சிறந்த தமிழ் "மொழிபெயர்ப்பாளர்” என்று உணர்த்துகிறார். பிரிட்டிஷ் எழுத்தாளர் "ஜேம்ஸ் ஆலனின்” நூல்களான "மனம் போல வாழ்க்கை,அகமே புறம்,வலிமைக்கு மார்க்கம்” போன்ற ஆங்கில நூல்களை தமிழில் மொழி பெயர்த்துள்ளார். “மனம் போல வாழ்க்கை” என்ற நூல் பதிமூன்று பதிப்புகளைக் கண்டிருக்கிறது. இதன் மூலம் "வ.உ.சி.ஆங்கிலத்தில் புலமை பெற்றிருந்தாலும் தமிழ் மீது அதிகம் பற்று கொண்டவர்” என்பதை அறிய முடிகிறது.

**மொழிப் பற்று வழி நாட்டுப் பற்று:**

"தண்டமிழில் பிற மொழியை கலந்து பேசுந்தரங்குறைந்த தமிழ் வழக்கை நீக்கல் வேண்டும் தொண்டரெலாந் தெருக்களிலே கடைகள் தோறும் கண்டு நிகர் தமிழ்ப் பெயர்ப்பால் புதுக்கல் வேண்டும்”

- கனிச்சாறு

என்ற பாவலேறு "பெருஞ்சித்திரனாரின்” கூற்று படியே வ.உ.சி.யும் "மொழி பற்று வழி நாட்டு பற்று” உருவாகும் என உணர்ந்து கொண்டு தலைவர்கள் பொது கூட்டங்களில் பேசும் போது தமிழில் பேச வேண்டும் என்கிறார். 19ஆம் நூற்றாண்டின் தமிழக காங்கிரஸ் தலைவர்கள் பொது கூட்டங்களில் ஆங்கிலத்தில் தான் பேசி வந்துள்ளனர். இதனை அறிந்து (தி இந்து நாளிதழ் ) வாசகர் ஒருவர் நமது "ஜனாதி தலைவர்கள் ஆங்கிலத்தில் யோசிப்பாதையும் ஆங்கிலத்தில் பேசுவதையும் நிறுத்தினால் ஒழிய பாஷை மேம்பாடாது” என்று எழுதியதை "பாரதி” மர்க்கவள் காட்டினார். வ.உ.சி. இதனை தலைவர்களிடம் எடுதுரைக்க கூறி தலைவர்கள் கூட்டங்களில் தமிழில் பேச வேண்டும் என வ.உ.சி. வேண்டுகோள் விடுத்தார்.

**வ.உ.சி. பதிப்புகளின் சிறப்பு:**

"வசைஒழிய வாழ்வாரே வாழ்வார்
இசையொழிய வாழ்வாரே
வாழா தவர்”

- திருக்குறள்

புகழுடன் வாழ்பவரே உயிருடன் வாழ்பவர் என்ற "திருவள்ளுவரின்” கருத்துப்படி வ.உ.சி. பதிப்புகளை

பதிப்பிப்பதில் சிறந்துவிளங்குகிறார். சந்தி பிரித்து பதிப்பித்தல், பதவுரை தருதல், சொந்த செய்தியை பகர அடைப்பில் தருதல், விளக்கம் இல்லாத இடங்களுக்கு விளக்கம் அளிப்பது, இலக்கண குறிப்பு அளிப்பது, உரை ஒப்பீடு செய்தல் மற்றும் பல சிறப்புகளை செய்துள்ளார்.

**தமிழ் ஆராய்ச்சி:**

"தேசிய விஷயங்களில் உழைத்து வந்தவர் இப்போது தாய் மொழியாகிய தமிழின் பொருட்டு உழைக்கிறார் என்று வ.உ.சி. குறிப்பது என்று பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கூறுகிறார். வ.உ.சி. தான் வாழ் நாளில் "இருபத்து நான்கு "(24) ஆண்டுகளை "இலக்கியம் ,இலக்கணம் சைவம் படிப்புகளுக்காக ஆராய்ச்சிக்காகவே செலவிட்டு சிறந்த தமிழ் தொண்டினை செய்துள்ளார்.

**முடிவுரை:**

"முக்கியமான ஆளுமை

மூன்றெழுத்து ஆளுமை

என்றதும் நமது நினைவுக்கு வருவது வ.உ.சி. தான் சுதந்திரப் போராட்ட வீரர் என அனைவருக்கும் தெரிந்த வ.உ.சி ஒரு சிறந்த தமிழ் அறிஞர் சிறந்த இலக்கியவாதி என்று "வ.உ.சி குறித்து தெரியாதவர்களுக்கு அறிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"விடுதலை போராட்ட வீரர் என்பதைக் கடந்து தமிழ் அறிஞர் என்னும் முகமும் வ.உ.சி க்கு உண்டு இத்தகைய தமிழ் அறிஞரும்,தமிழ் இலக்கியவாதியும் தமிழ் மொழி பெயர்ப்பாளருமான வ.உ.சி (18.11.1936) அன்று மறைந்தார். அவர் மறைந்தாலும் அவர் நம் நாட்டிற்கு செய்த தொண்டும் நமக்கு அவரை நினைவு படுத்திக் கொண்டே இருக்கும்.

**டே . ஜெபாவின்சி**

**இளங்கலை மூன்றாம் ஆண்டு**
**தமிழ் இலக்கியம்**

## இந்தியா வளம் பெற எழுந்து வா வ. உ. சி

ஏழை எளியவர்களுக்கு வாதாடினாய்..

ஏழை தொழிலாளர்களுக்கு போராடினாய்..

சுதந்திர இந்தியாவிற்கு தீண்டாடினாய்..

சுதேசி கப்பலை இயக்க மன்றாடினாய் ..

எப்போது உன் வாழ்வா கொண்டாடினாய்..

தந்தையை மிஞ்சும் தகைமையை!

தந்தையும் அஞ்சும் தலை மகனே!

இரைக்காக கடல் கடக்க முடியாத நிலை என்றால்

இரையாகவே கடலில் கிடக்க நினைத்தாய்

வருமோ உன் போன்ற நெஞ்சம்?

வாய்ப்பூட்டு சட்டமும் உன்னிடம் தஞ்சம்!

பயத்தால் தேச துரோகியாக அறிவித்தார்கள் அந்த விரோதிகள்-உன்

பேச்சு நயத்தால் அடைந்து விடுவோம் சுதந்திரம் என்று!

மாடென்று செக்கிழுக்க வைத்தார்கள் மதிகட்டவர்கள்!

நாடென்று நினைத்து தேர் இழுத்தாய் என்று அறியாதவர்கள்!

திலகரின் சொற்களென்னும் வித்தை சொத்தாக கருதினாய் !

தென்னாட்டு திலகரே! முத்து நகர் முத்தாக விளங்கினாய்!

சுதந்திர காற்றை நீ சுவாசிக்கவில்லை ..

ஆனால் நேசிக்காத பொழுதில்லை..

சுதந்திரம் இன்று பெற்று விட்டோம்..

அந்நியம் மட்டும் அந்நியமாகவில்லை!

சுதேசி என்ற எண்ணம் சிறிதளவு..

தேசத்தின் மீது எழும் பக்தி பெரும் அளவு..

சுய நல இந்தியா கயவர்களால் சூழப்பட்டுள்ளது..

சுயம் என்று நீ நினைத்திருந்தால்

பணக்கார வரிசையேல் பில்கேட்சுக்கும் இடமில்லை !!!

மீண்டும் வர நினைத்தால்..

உலகத்தின் எங்கோ ஒரு மூலையிலாவது

உன் குரல் கேட்டுக் கொண்டிருக்கும்..

அதனைக் கேட்டு எழுந்து வா..

அவ்வாறு நிகழ்ந்தால் பின்னே தலைமுறையும்

பின்னால் நின்று வாழ்த்தும்..

பிறப்பாய் மீண்டும் என்றால்,

என் பையில் வந்து முளைப்பாய்..

**சி. மகாலெட்சுமி**

**முதுகலை இரண்டாம் ஆண்டு தமிழ் இலக்கியம்**

## காதல் சிறகு

காற்று வெளியிடையில்
காதல் கொண்ட பறவை
பசுமை போர்த்திய வனத்தில்
பாதை மாறா பயணத்தில்
பின் தொடர்ந்து சென்றது
தான் காதல் பறவையை நாடி
தடம் ஏதுமில்லை அதன்
காதல் சிறகு ஒன்று மட்டும்
வீசிய காற்றில் விசாலமாய்
வந்தது..

**அ. நிவேதா,**

**இளங்கலை இரண்டாம் ஆண்டு தமிழ் இலக்கியம்**

## என் கற்பனை உலகம்

தென்றல் காற்றும் தென்னங் கீற்றும்
மாலை ஊற்றும் - என
மா உலகை போற்றும்
உலகின் ஆசையெல்லாம்
நதியாய் ஓடுகிறது
கையில் சிக்காதா என்று
காற்றும் தேடுகிறது..
செவ்வான நீரோடையில்
செவ்வாய்க் கிறாகமும் சொக்குகிறது –அதைக் கண்டு
செவ்விதழில் தோன்றும்
செந்தமிழும் திக்குகிறது..
அசைகின்ற அலையும்
சோகம் பாடுகிறது
அலைகின்ற மேகமும்
அதைக் காண ஓடுகிறது..
காகித கப்பலிட்டு
காடு மழையில் ஆடியாதும்
கருப்பட்டி காப்பி ருசியை
கடுங்குளிரில் தேடியதும்
இன்பத்தில் இணைந்து

இயற்கையோடு உறவாடியாதும்

இரவின் எழில்களை

ஏக்கத்தோடு பிறை தேடியதும்

இன்றும் கூட நினைவிருக்கிறது

ஏனோ நெஞ்சம் தொலைத்திருக்கிறது

மழைக்காலப் பள்ளிக்கூடம்

மானப்பாடமாய் நினைவிருக்கு

பள்ளி முடிந்து பாதை நீரில்

துள்ளிய சுகம் இன்னுமிருக்கு

இத்தனை இன்பமும்

கானல் நீராய் போகவே

சடமாகத் திரிகிறோம்

சதிகார உலகிலே..

கடந்து போன அக்காலம்

கனவாகிப் போனதென்ன

கவிதைக்குள் இன்று அது

கணமாகிப் போனது என்ன !!!!

திருநங்கை

இயற்கையின் அவசரம் ,ஒற்றைக் கருவில் இரட்டைப் பண்பு..

இவர்கள் தலையெழுத்தை கிறுக்கழிலா வடித்தாய்??

காலம் பாதியில் மாற்றிய கோலம் ,

நீ இறைவனின் பிறப்படி, இறவாச் சுடரடி ,

உன் பிரகாசம் கண்டு ஞாயிறு குனியட்டும்

பொறுமையின் புள்ளி கண்டு பூமி நிமிரட்டும்..

வாடிய பயிராகு ஆறுவடைக்காக ,

சோர்ந்த மலராகு கனிகளுக்காக,

வீதியோர வித்தைகளை நிறுத்து!!!

பாதியான மீதியைத் தேடு!!!

பார்வதியின் பாதியைக் கேளடி!!!

பாரதப் போரின் முடிவும் நீயடி!!!

நீ படைப்பில் வித்தியாசம்..

உணர்வுகள் உழுத்த உறவே ..

ஆறறிவு அஃறிணைகளால் அல்லல்படும் சிறகே !!!!

சிவனின் பிள்ளைகள் இவர்களுக்காகத் திறக்க

நெற்றிக் கண்கள்தான் இல்லை!!!!!!!!

**வெ. மாரிச்செல்வி,**
**முதுகலை இரண்டாம் ஆண்டு தமிழ் இலக்கியம்**

<u>தொலைத்தேன்</u>

படிக்கின்ற வயதில்

கல்வியைத் தொலைத்தேன்

வாலிபத்தில் –

இளமையைத் தொலைத்தேன்

தாயானதில் –என்

குழந்தை தனத்தை தொலைத்தேன்

வீட்டில் வேலை பளு

கூலியைத் தொலைத்தேன்

கடமைகளில் –என்

கனவை தொலைத்தேன்

உறவுகளில் என்

உண்மையைத் தொலைத்தேன்

வறுமையின் பிடியில் வாழ்வைத் தொலைத்தேன்

என்னுள் எத்தனையே ஏக்களை தொலைத்தேன்..

**லா . உமா ரோஸ்லின்**
**முதுகலை இரண்டாம் ஆண்டு தமிழ் இலக்கியம்**

பாரதியார்

**முன்னுரை :**

ஒரு கவிஞன் சமூக சீர்திருத்தவாதியாகவும் பரந்த நோக்குடையவனகவும் இருப்பானே யானால் அவனது நடைமுறை

வாழ்வும் அவன் கொள்கையோடு ஒத்துப் போகிறதா என்று கவனிப்பது அவசியம். பெற்றத் தாயையும் பிறந்த பொன் நாட்டையும் போற்றிடாமல் ஒருவன் வாழ்வில் உயர் நலம் அடைய முடியாது என்பது நமது நாட்டவரின் நம்பிக்கை.

அந்நம்பிக்கை பொய்க்காது பூமியில் தோன்றியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் . ' சிறியன சிந்தியாதவராக, தீண்டாமைக்கு சவுக்கடி கொடுத்தவர். நமக்குத் தொழில் கவிதை என்று வாழ்ந்த கவிஞன். "பூமிக்கு எனை அனுப்பினாள் அந்த பூத மண்டலத்தில் என் தம்பிகளுண்டு என்று பிரபஞ்ச ஒற்றுமையைப் பற்றிப் பாடி 'மகாகவி ஆனவர்.

சுப்பிரமணிய பாரதியார் இந்தப் பெயரை உச்சரிக்கும்போது நாவிலே இனிக்கும் நற்பெயர், தமிழராய்த் தரணியில் பிறந்தார் ஒவ்வொருவரின் செவிகளில் நுழைந்து நாட்டம் இரண்டில் புரட்சியைப் பூக்க வைக்கும் சக்திதாசனின் பெயர். அவரது கற்பனையில் பாரத தேசத்தைக் காண்போம்.

**இளமையும் கல்வியும் :**

சுப்ரமணிய பாரதியார் டிசம்பர் 11,1882 ஆம் ஆண்டு எட்டயபுரத்தில் சின்னசாமி – இலக்குமி அம்மையாருக்கு மகனாகப் பிறந்தார். தன்னுடைய இந்தாம் அகவையில் தாயை இழந்தார். ஏழு வயது முதலே கவிதை மழையைப் பொழியத் துவங்கினார். இவரது பதினோராவது வயதில் கவிதை பாடும் ஆற்றலையும் புலமையும் பாராட்டி எட்டாயபுர மன்னர் "பாரதி என்ற பட்டத்தை வழங்கினார். அந்நாள் தொட்டு "பாரதியார் என்று அழைக்கப்பட்டார்.

இவர் கவிஞர் மட்டுமல்லாமல் எழுத்தாளர், பத்திரிக்கை ஆசிரியர்,சமூக சீர்திருத்தவாதி. இவர் எழுதிய பாடல்களின் மூலமாக மக்களிடம் உறங்கிக் கிடந்த உணர்ச்சியைத் தட்டி எழுப்பியவர். "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்று பெண் உரிமைக்காக பாடியவர்.

"சாதிகள் இல்லையடி பாப்பா, குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்று கண்டித்தவர். திருநெல்வேலியில் அமைந்துள்ள இந்து கல்லூரியில் ஒன்பதாம் வகுப்பு வரை படித்தார். அக்கால கட்டத்திலேயே தமிழ் அறிஞர்களோடும் சான்றோர் களோடும் சொற்போரில் ஈடுபடும் சுதந்திரம் பெற்றவர்.

**திருமண வாழ்க்கை :**

1897 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் தேதி பாரதி தன்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாத நாளாக மாறியது. 14 வயது மட்டுமே நிரம்பிய பாரதிக்கு 7 வயது சிறுமியான செல்லம்மாளை குழந்தைத் திருமணம் செய்து வைத்தனர். இதனைத் தவறு என்று உணர்ந்த கவிஞர் பின்னாளில் தன் கவிதைகள் மூலம் குழந்தைத் திருமணத்திற்க்கு எதிராக குரல் கொடுத்தவர். இவரது திருமண வாழ்வின் அர்த்தமாக தங்கம்மாள், சகுந்தலா என்ற இரு பெண் மகவுகளைப் பெற்றவர்.

**சமூக வாழ்க்கையில் பாரதியார் :**

தனது வாழ்வில் துயரப்பட்டக் காலத்தில் காசிக்குச் சென்று அலகாபாத் பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருதம் மற்றும் இந்தி மொழியைக் கற்றறிந்தார். இம்மொழி மட்டுமல்லாது ஆங்கிலம்,வங்காளம் போன்ற பிற மொழிகளையும் கற்றுத் தெளிந்தார்.

இத்தனை மொழிகளைக் கற்ற புலமையும் பயிற்சியும் உடையவர் ஆதலால் தான் "யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல இனிதாவதெங்கும் காணோம்" என்று நிமிர்ந்து கூறினார். புரட்சியை தெளித்த கவியின் வரிகள் ஏட்டில் முதன்முதலில் 1903 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

தமிழ் ஆசிரியராக மதுரை சேதுபதி பள்ளியில் சிறிது காலம் பணியாற்றினார். பின்னர் சுதேசமித்திரன் பத்திரிக்கையின் துணை ஆசிரியராக பொறுப்பேற்றார். அன்றைய இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்ற தலைவர்களின் நட்பினைப் பெற்றார். அவரது கவிகளும் கூராக மக்களின் மனங்களை செதுக்கத் துவங்கியது.

"பாரதத்திடை அன்பு செய்தல் பாவமா" என்று வெள்ளைக்காரனை எதிர்த்து சிலர் கேட்கத் துணிந்து கொண்டிருக்கும் நேரத்தில் வளர்ந்தவர் பாரதி. காசிநகர் அவருக்கு கூரிய தேசியப் பார்வையைத் தந்தது.

அவரின் பாரத சமுதாயம் பாட்டிலுள்ள "பொதுவுடைமை" என்னும் புதிய சொற்றொடர் வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய சமூகத்திற்க்கு அவர் விதிக்கும் விதியாகும்.

அகிம்சை வழியான தேசிய ஆன்மீக இயக்கத்தை முடுக்கிவிட நினைத்தவர் பாரதியார். "இன்று புதிதாய்ப் பிறந்தோம்" என்கிற மனோநிலை பாரதியிடம் எப்போதும் இருந்துள்ளதை உணர முடிகிறது.

**மகா கவியின் கவிச்சிறப்பங்கள்:**

கவிதை, இலக்கியம் என்பதற்கு எவ்விதமான இலக்கணம் வகுக்கப்பட்டாலும் பாரதியை விளக்கி விட முடியாது. ஒரு மகா கவிக்கான தகுதி எவையாயினும் அவையனைத்தும் பாரதியிடம் வாய்த்திருப்பதை நாம் மறுக்க முடியாது. பண்டிதப் புலமை ,நாட்டார் வழக்காற்றியலில் நாட்டம்,சங்கீத அறிவு, மனிதநேயம்,சமுதாய விழிப்புணர்வு, தெளிந்த அறிவு அனைத்தும் அமைந்தவர்.

பாரதியாரின் அன்னை வழிப் பாட்டனார் செந்தமிழ்ச் செய்யுலாள் மூன்று வேலையும் சிவனை பூசை செய்பவர். ஆதலால் அவரது உதிரத்திலேயே தமிழ் அறிவு காலந்திருந்தது எனலாம். இதனை பாரதியார் தமது சுய சரிதையில்,

"என்னை ஈன்றெனக் கைந்து
பிராயத்தில்
ஏங்க விட்டு விண் எய்திய
தாய்தனை
முன்னை ஈன்றவன் செந்தமிழ்ச்
செய்யுளால்
மூன்று போழ்துஞ் சிவனடி
யேத்துவான்"

- என்று கூறுகிறார்.

வாழ்வோ, தாழ்வோ, இன்பமோ, துன்பமோ எது வந்தாலும் இது இந்தியர்கள் அனைவருக்கும்

பொதுவானது என்று, “முப்பது கொடியும் வாழ்வோம் – வீழில் முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்” என்று வரிகளின் வழி முழங்கியவர்.

வீரம் உரைப்பதிலும் மகாக்கவிக்கு இணை இல்லை என்பதை, “பாரத பூமி பழம் பெரும் பூமி நீரதன் புதல்வர் இந் நினைவகற்றாதீர்” என்பதாய் சத்திரபதி சிவாஜி தனது படைகளுக்கு கூறும் பாடலாக அமைத்துள்ளார்.

“சாதி ஒழித்தல் நன்று-நல்ல தமிழ் வளர்த்தல் மற்றொன்று” என்னும் குறிக்கோள்களோடு ஈ.வெ.ரா. பெரியார் சாதி ஒழிப்பு இயக்கத்திற்கு வித்திடும் முன்னரே “சாதி வேரைப் பிடுங்குங்கள்” என்று கூறியவர் பாரதியார் .

உயிர்களனைத்தும் ஒன்றே” என்று “காக்கைக் குருவி எங்கள் ஜாதி நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்” எனக் பாடி மகிழ்ந்தவர்.

**முடிவுரை:**

பெண்களை இழிவு செய்தல் மடமையாகும் என்பதை உரக்கக் கூறியவர். “பெண்மைதான் தெய்வீகக் காட்சியடா” என்று பாடியவர்.

அவரது பெண் விடுதலை பற்றிய உணர்வு மகத்தானது “மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்” என்று சினந்தவர்.

நமது நாட்டு பெண்கள் பாரதியின் வரிகளை வாழ்க்கையாகக் கொண்டால் இன்றய சமூகக் கொடுமைகளில் இருந்து மீளலாம்.

**வெ. மாரிச்செல்வி,**


**முதுகலை இரண்டாம் ஆண்டு**
**தமிழ் இலக்கியம்**



பா.பிரீத்தி

முதுகலை இரண்டாமாண்டு


தமிழிலக்கியம்



ரா. ஆவுடை லெட்சுமி

BA Tamil


மகளாம் ஆன்மா



பா. பிரீத்தி
முதுகலை இரண்டாமாண்டு
தமிழிலக்கியம்



K. Kompammal
Puvaneswari
III BA தமிழ்



ஆ. அருணா தேவி

இளங்கலை தமிழ் இலக்கியம்

# சுபாஸ் சந்திர போஸ்



ரா. புவனேஸ்வரி
இளங்கலை தமிழ்




மு. அபிராமி
முதுகலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்